# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.CC.266/2024

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சோழன் SSI-298 | Prosecution | LW-9 as PW-3 |
| Father Name | முருகேசன் | Defence | |
| Station | வைத்தீஸ்வரன் கோயில் PS. | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 57/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**25.02.2026 எதிரிகள் 1, 2, 4 ஆஜர். எதிரி .3 ஆஜரில்லை மனு அனுதிக்கப்பட்டது.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் மற்றும் உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரின் கையொப்பமும், கையெழுத்தும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் நிலைய பொருப்பில் இருந்த போது கடந்த 24.10.2023 ம் தேதி சீர்காழி GHயிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கலியமூர்த்தி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலைய குற்ற எண்.234/2023 இதச பிரிவுகள் 294b, 324, 506(ii) ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். புகார்தாரர் கொடுத்த **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆகவும் குறியீடு** செய்யப்படுகிறது.

வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். உதவி ஆய்வாளர் வழக்கு கோப்புகளை எடுத்துக்கொண்டு ஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் ஆனந்தபாபு ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

மேற்படி ஆவணங்கள் **ஆ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். இந்த வழக்கின் எதிரிகளை தேடிய நிலையில் எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் மயிலாடுதுறையில் முன்பிணை பெற்றிருந்ததினால் அவர்களை கைது செய்யவில்லை. புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்தவர் பூபேஷ் அவர்களை யும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மருத்துவர் கொடுத்த காயச்சான்று அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் கடந்த 21.11.2023 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 294b, 324, 506(ii) கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகள் யாரையும் சரியாக விசாரணை செய்யாமலும், சாட்சிகள் யாரையும் சம்பவ இடம் சென்று வாக்குமூலம் வாங்காமலும், காவல் நிலையத்தில் பொய்யான வழக்கை தயார் செய்து எதிரிகள் மீது பொய்வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**